912

உ

ஸ்ரீ ராமஜெயம்.

காமயநாயக்கனூர் மருதூரென்று பெயர்பெற்ற

சாப்டூர் ஜெமீன்தார் மகா-ள-ள-ஸ்ரீ ஸ்ரீமான்

சதுரகிரி கட்டாரி நாகய காம ராஜேந்திர

ராமசுவாமிக் காமய பூபதியவர்கள் செய்த

வனவேட்டைப்பிரபந்தச் சிந்து

போடிநாயக்கனூர் ஜெமீன்தார் மகா-ள-ள-ஸ்ரீ

T. V. K. காமுராஜயபாண்டித் துரையவர்கள்

உத்தரவின்படி

போடிநாயக்கனூர் மகா-ள-ள-ஸ்ரீ

குற்றாலலிங்கம் பிள்ளையவர்களது குமாரர் ஜோதிடம்

வெள்ளையாண்டியாபிள்ளையவர்கள்

இயற்றியதை

போடிநாயக்கனூர் ஜெமீன் மானேஜர்

மகா-ள-ள-ஸ்ரீ ஷேக் இஸ்மாயில் சாஹெப் அவர்கள்

குமாரர்

H. S. ரஹமத்துல்லா சாஹெப் அவர்களால்

பிழையறப் பரிசோதிக்கப்பெற்று

மதுரை

பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

1924.

2 - JAN 19

O-, 1MVP, S
N24
181295

உ

ஸ்ரீ ராமஜெயம்.

காமயநாயக்கனூர் மருதூரென்று பெயர்பெற்ற
சாப்டூர் ஜெமீன்தார் மகா-௱-௱-ஸ்ரீ ஸ்ரீமான்
சதுரகிரி கட்டாரி நாகய காம ராஜேந்திர
ராமசுவாமிக் காமய பூபதியவர்கள் செய்த

வனவேட்டைப்பிரபந்தச் சிந்து.

2 - JAN 1924

போடிநாயக்கனூர் ஜெமீன்தார் மகா-௱-௱-ஸ்ரீ
T. V. K. காமுராஜயபாண்டித் துரையவர்கள்
உத்தரவின்படி

போடிநாயக்கனூர் மகா-௱-௱-ஸ்ரீ
குற்றாலலிங்கம் பிள்ளையவர்களது குமாரர் ஜோதிடம்
வெள்ளையாண்டியாபிள்ளையவர்கள்

இயற்றியதை

போடிநாயக்கனூர் ஜெமீன் மானேஜர்
மகா-௱-௱-ஸ்ரீ ஷேக் இஸ்மாயில் சாஹெப் அவர்கள்
குமாரர்
H. S. ரஹமத்துல்லா சாஹெப் அவர்களால்
பிழையறப் பரிசோதிக்கப்பெற்று

மதுரை

முஹம்மதியன்பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

1923.

சாற்றுக் கவிதைகள்.

ம்பாடிநாயக்கனூர் ஜமீன் மானேஜர் மகா-ா-ா-ஸ்ரீ H. S; ரஹமதுல்லா சாஹேப் அவர்களியற்றிய

வெண்பா.

சீராருந் தென்காசைச் சீலவெள்ளை பாண்டிமன்னன்
பாராருங் காமய்ய பாண்டியனார் காசாருங்
கானசத்திற் சென்றுகரிக் கன்றுகொணர்ந் திட்டகதை
மானிலத்தே செப்பினன்நன் வாக்கு.

திருமலைவேல் கவிராயராயர் ஆனைமலையன்பட்டி

புராணிகருடைய குரு.

குளகப்பா.

சிந்துரத்தார்த் தணிபுவனத் திசைமருதூர் புரந்தருளுஞ்
 சியந் தேன்கள்
சிந்துரத்தார் புனைந்தபுயக் காமயவேள் சேனையொடு
 சென்று காணிற்
சிந்துரத்தா டம்பரத்தைத் தீர்த்துலக ரேத்தெடுப்பத்
 திருககன் றேந்திச்
சிந்துரத்தா லம்புலிபோற் றிலதமணி தெய்வமின்னார்
 செறிந்து வாழ்த்த 1
வாரணத்தைச் செப்பிமறை யந்தணர்க ளாசிசொல
 வரையர் சூழ
வாரணத்தைத் துவசமென வழங்குகுக வேலவனை
 மகனை மான

வாரணத்தைக் சுட்டுமத கரிக்குருளை மகிழ்ந்துகொணர்
மகிமையான
காரணத்தைக் காசை வளர் குற்றால லிங்கமருள்
கருணை மைந்தன் 2
பலபலசந் தோஷமொழி பகருவதி லதிபிரியன்
பரிந்து நேயர்
கலகலவென் றானந்தக் காட்சியினிற் களித்திருக்கக்
கதைகள் செய்வோன்.
சிலசிலசந் தேகமறத் திருக்கணிதச் சோதிடந்தேர்
திலகன் மேலோர்
நலநலமென் றேத்துவெள்ளை யாண்டிநனி சிந்தையால்
நவின்ற தம்மா.

சுத்தாத்வைத ஞான சிரோன்மணியாகிய முத்துச்சாமி முனிவ
ரவர்களின் பௌத்திரனும் பொன்னுச்சுவாமி பிள்ளையவர்க
ளது புத்திரனுமாகிய மதுரை மெக்கானிஸ்ட் மகா-ள-ள-ஸ்ரீ
சுந்தரலிங்கம்பிள்ளையவர்களியற்றியது.

திருவளரும் பணிமார்பன் ஜெயசீலன் காமயவேள்
சிங்கே ரொப்பான்
றருவளருங் கானகஞ்சென் றரசர்களுங் குடிபலவுந்
தனைச்சூழ்ந் தார்ப்ப
மருவலரும் மனமருள மதகரிசுட் டதன்கன்றைக்
கொணரக்கண்டு
கருவளரும் முகில்பொழிற்சூ ழுலகினுபர் நாவலருங்
களிப்புற்றோங்க

திகழொளிநற் றாளவளை திரிபழனத் தென்காசை
திகழ்வேளாளன்
செகம்புகழுஞ்சோதிடந்தே ரெங்கள்வெள்ளை யாண்டிமகிழ்ந்
திசைத்த சிந்தா
லகமகிழ்கொண் டுயர்புலவ ரழகிதுவென் றுரைவதுகண்
டருளுற்றோங்கு
மகத்தியனு மகத்தியமென் றுவலுற வாணியுநின்
றுடினளே.

பெரியகுளம் மகா-ஈ-ஈ-ஸ்ரீ

திருவேங்கிட்சாமிக்கவிராயரவர்களியற்றிய

குளகம்

மாதங்கம் புயனருள்சேர் மால்ராம காமயவேள் வயங்கு கான
மாதங்கம் புயமணைத்த மலைக்குமரி மகவுடனே மானவேட்டம்
மாதங்கம் புயரவிடுத் தசுரர்களை வாட்டியபோல் மதர்த்தெதிர்த்து
மாதங்கம் புயனிகரா யின்றவிளங் குருளையொடுவரக்கண்டார்த்து 1
நாகத்தைச் சுட்டதனு னல்கிளங்கன் றேந்திவந்த நன்மை யான
பாகத்தைப் பட்டிணத்தார் பற்பலவா யேத்தெடுப்ப பலநூலாட்சி
யோகத்தைச் சோதிடத்தை யுற்றகுற்ற லச்சுகுண ருசிதமாம்வி
வேகத்தைப் பெற்றவெள்ளை யாண்டிவெகு குதுகலமாய் விளம்பக்
கண்டே 2
தென்காசைப் பதியிலகத் திருவளரச் சீர்பெருகச் சிறந்தமேலோர்
நான்காசை யுறப்புடைகொள் நற்காமு ராஜயவேளெனுநரேந்த்ரன்
மன்காசை வலமணஞ்சேர் மாமருதூ ராள்மருகர் மகிமையாய்ந்தே
பொன்காசைப் புலவர்தமக் கீய்ந்துபிர சிட்டுயர்ந்த புகழ்பெற்
[றுனே

உ

ஸ்ரீராமஜெயம்.

வெண்பா

காப்பு

சீராருங் காமயவேள் சிங்கார வேட்டமதைப்
பாராரு மேத்திப் பலபுகழ—மாராத
சித்தத் திடத்துடனே செப்புதற்குச் சித்திதரு
மத்தி முகனடி காப் பாம்

கடவுள் வணக்கம்.

சிந்துச் சீர்

சீர்வளரு மாமருதூர் வாசன் — வேட்டை
செய்திடு சிறப்பிலகச் செய்யருள்க ஷேசன் 1

பார்வளரு முருகனடி போற்றி — ஆதி
பாசுபதன் பார்பதி செம் பாதமலர் போற்றி 2

அருளருளுஞ் சதுரகிரி மூர்த்தி — வல்லக்கொண்
டம்மைபத மென்சிரசி லணியாகச் சேர்த்தி 3

பெத்தண சுவாமிபலா வடியான் — தூங்கற்
பெரியோனும் பச்சமலை யப்பனரு ளடியேன் 4

கயிலாச நாதர் கன்னிமாரும் — உருட்டுக்
கருப்பணு மூக்கறையம் மாளே யருடாரும் 5

நாமகளே நீயருள் நான் வாழ — தலைவெட்டி
நாகய தாத்தாநீ நல்லருள் செய்சால 6

காமயவேள் வேட்டைபுரிச் சிந்து — பாட
காமயவேள் தந்தையெனுங் கண்ணவருள் வந்து 7

செந்திவளர் கந்தமுருகேசா — சிந்து
செந்தமிழிற் செப்பவருள் செய்யும் விசுவாசா 8

அவையடக்கம்

ககனவரை யுயர்கருட னுடும் — அதைக்
கண்டு மசகம் பறவை காட்டுவபோற் பாடும்

மாங்குயில்களாங்குபுரி யோலங் — கேட்டு
வாஞ்சையொடு காகமது கத்துவதுபோலும்

வள்ளுவனு ரவ்வைபலர் முன்னந் — தமிழ்
மாமுனிவர் செய்தபெரும் வாரிதியி லின்னம்

அள்ளியுண்ண வாவலுறும்போலே — வெள்ளை
யாண்டிசொலும் பாவுநல மாம்புவன மேலே

நாவலர் முன்னுக விதைப் பாட — மகவு
நவிலுமொழி மழலையென நன்குகொண் டாட

கூறுதமி ழாய்ந்தபெரி யோரே — யானுங்
கூறுவதி லெய்துபிழை கொண்டணைப் பீரே

நூல்

சீர்சிறந்த மாமருதூ ரரசுபுரி காமயவே டிகழ்நன் னுட்டிற்
பார்சிறந்த கொடிக்குளமேற்பக்கவண்ணப் பாரைதருப் படர்ந்த
(கானிற்
கார்சிறந்த வணக்கரிமான் கரடிபுலி வேட்டைநலங் கருதிச்சென்
(றங்
கேர்சிறந்த மாதங்கத் திளங்கன்றைக் கொணர்சரித மியம்பு
(வாமே

(நாட்டு வளம்)

தேன்பொழியு மாலேதிகழ் தேனே — யானுஞ்
செப்புவேன் சிந்துகவிகேளுமட மானே 1

மதுரைச்சில் லாவுயர்தென் பாகந் — திரு
மங்கலந் தாலூகா மாமருதூர் மேகம் 2

மாதமும் மாரியது பெய்ய — பூமி
மாவளமுங் காவளமும் நீர்வளமுற் றுய்ய 3

கன்னல்நிகர் சென்னல்வள மோங்கு — கதலி
கமுகொடு பலாதாழை வளரநதிப் பாங்கு 4

துள்ளுவரால் கமுகுகுலே தாவி — தென்னே
சூழிளநீர் பீறவத னேடுவயல் மேவி 5

மள்ளியர்தோள் மேதிதனந் தோய — கன்று
வந்தமுத முண்பதென மதிமருளுற் றுய 6

கன்னல்ரசஞ் சென்னல்வயல் பாயுந் — தாளக்
கதிர்வீச மாமருதூர்க் கழனிவளே மேயும் 7

கவுண்டின்ய மர்நதிநீர் வளமே — மருதூர்க்
கால்வழியே வந்துமிகப் பாய்ந்திடுபல் குளமே 8

காமயவே ளாளும்வள நாடு — லக்ஷக்
கணக்கான செய்களிலே நெல்மலேபோல்க் கூடும் 9

மாமேரு வாமெனவே தோணும் — ராசி
மன்னர்புகழ் நெற்கட்டு ஒண்ணுகலங் காணும் 10

யெக்காலமுங் குடிகள் சீர்த்தி — மங்கா
திலங்கக் கலங்காத் திடச்சித்தம் பூர்த்தி 11

சதுரகிரி வல்லக்கொண் டம்மை — கிருபை
தாராளமாக வருள் செய்வதுவு முண்மை 12

தவநாதர் சித்தர்புகழ் நாடு — என்றுந்
தருமார்த்தம் பரமார்த்தந் தானுற்ற நாடு 13

வேதியர்க ளாதுலர்கள் நாளும் — வித்வ
விசுவாச பந்தத்வம் விலகாமல் நீளும் 14

காமயவேள் கொடைபோல மேகம் — மின்னல்
கைவேலெனக் காட்டிக் கவினுற்ற தேகம் 15

கனபேரி போலெழிலி யோங்கி — மருதூர்
கவுண்டின்ய நதிபெருகக் ககனத்தை நீங்கி 16

வாரிதியிற் நீரதனை வாரி — தோப்பு
மலைமீதிற் ராக்ஷதரை மாயவனுஞ் சீறி 16

இடுகிடென படியதிர ராம — பாணங்
கெதியாகவிட்டதுவை யொப்பவுமிப்பூமின் 17

பதரான சுமைதீர வேண்டி — கண்ணன்
சதுராக சரமாரி பகைஞர்மிசை தூண்டி 18

விட்டகதி மட்டெனவு மார்த்து — வான
வில்லைப் பசேலென்ன வெகுவாகச் சேர்த்து 19

பளீர் பளீ ரென்ன மின்னி — சதுரகிரி
பரமவை தீகசுப பகவனையு மெண்ணி 20

கட்டளை யிட்டபடி யேகி — துய்ய
கட்டளைக் கோம்பைகிரி மீதினுயர்வாகி 21

எண்ணம் பலித்தபடி மாக்கள் — மெச்சும்
வண்ணப்பா ரைதன்னில் வந்து பல கோக்கள் 22

எங்கெங்கு மேகமாய் நின்று — மேக
மேழுமொன் றுய்க்கூடி காமயவே ளன்று 23

வனவேட்டை மிசைநாட்டம் வைத்து — துப்பாக்கி
வாங்கிக்கை தாங்கியே சுட்டதனை யொத்து 24

இடியோசை காட்டியே மின்னி — மேக
மேராளமாய் பெய்த தென்சொல்வேன் கன்னி 25

காமயவேள் தோளிலகு மாலை — போல
கானருவி நீரோடை கதித்துலவி மேலே 26

குவடுவரை நிமிரருவி நீரே — கொண்டல்
குளிர்ந்துபல கான்களிலும் சூர்குரிஞ்சி நேரே 27

பாய்ந்துபல வோடைநதி முட்டி மருதூர்
பாங்கான கவுண்டின்ய நதியதனைக் கிட்டி 28

ஆம்பல்பல பூங்கமல வளமே — நீங்கா
தமைந்திலகு பலவான கரைகளணி குளமே 29

கொடிக்குளங் குணவேந்த னேரி — நெடுங்
குளம்பெரிய குளமுயர்ந்த குளங்குடிச் சேரி 30

காமயவே ளோங்குபுகழ் கூறும் — கவிஞர்
கருத்துநிறை வேறிமகிழ் கூறுவபோல் தேரும் 31

உள்ளம் நிறைந்தமகிழ் போல — தடாகப்
பள்ளம்நி றைந்துபரி பூரணமாய் ஞாலம் 32

போற்றுமுயர் ராமய்யகா மய்யன் — பூமி
புகழுற்று வாழ்வுமிக பொலியுமரு ளய்யன் 33

நகர் வளம்.

நாட்டுவளத் தோடுமலை வளமே — இன்னம்
நகர்வளம தோதுவதைக் கேளடியஞ் சுகமே 1

சூரியனுஞ் சந்திரனுந் தினமே — வந்து
துயமனை தாண்டிடமாட் டாமலதன் மனமே 2

சாளரங்கள் மூடுகதவங்கள் — தன்னை
தான்றிறக்கும் வேளைவர தக்கபெருந் தவங்கள் 3

செய்யுந்திரந் திட்டபிற காலே — பாது
செய்பகதிர் வைக்குமதிற் செய்ய திருக்காலே 4

மாடமிசை வாழுமட வார்கள் — மதி
யாடியென வைத்துயர்ந்த பொட்டுமிடு வார்கள் 5

வீதிதோறும் வேதியர்க ளீட்டம் — நான்கு
விதசேனை முரசங்கள் வீதியினூர்ப் பாட்டம் 6

கட்டாரி நாசயகா மேந்தரர் — என்று
காகளட மாரவொலி காட்டரச தந்த்ராள் 7

சுற்றிடுப ராக்குரிமை கூறி — அய்யன்
றுதிபாடி விசுவாச விருதார்த்து மீறி 8

மாதிடங்கள் கூறுமுறை யாளர் — செய்ய
சோதிடவி யாகரணஞ் செப்புவிதி யாளர் 9

சாதுரிய சதுரகிரி நாமன் — தங்கு
தடபுயத யாளதிர சௌகர்ய நேமன் 10

நகரத்தின் வளமதனைச் சொல்ல — பொன்
நகரமது யீடலது புவியிலெது வின்ள 11

ககனமுகில் மாடமிசை படியும் — பாநு
கலைமதியுங் கதிமருளக் காட்டுதுயில் கொடியும் 12

அகிழ்நிகள வாருதிபோற் றங்கும் — அங்கு
அணியணியாய் மாடமணி கூடமதி லங்கும் 13

சங்கநிதி பதுமநிதி கூடி — அளகை
தானிகர தாமெனவே சாற்றுமனர் கோடி 14

ஆடகம் பூமிதள மாக்கி — மேலே
ஆணிவயி டூரியத் தூணைநிலை யாக்கி 15

மாணிக்கத் தால்ச்சரங்கள் பூட்டி — பவள
மரகத நீலமணி வயிரங்கள் கூட்டி 16

ஆசார முன்முகப்பு வாசல் — புதிய
அரண்மனைக் கட்டட மாந்திருவின் வாசம் 17

ஆண்மகவு விர்த்திமிகச் சேரும் — என்று
அரியமறை சிற்பனூ லாய்ந்தவர்க ளாரும் 18

வள்ளலென வோதுவெள்ளை யாண்டி — தானே
வழுவாத கணிதமுறை கொண்டுரைத் தாண்டி 19

ஓதியமு றைப்படியே சேரும் — பூவை
யோத்தியிது வாகுமென வோங்குமரு தூரே 20

அரசுபுரி ராசதுரைச் சிங்கம் — சீர்த்தி
அரைகுவேன் கேளெனக் கானமணித் தங்கம் 21

பாட்டுடைத் தலைவன் புகழ்

சீத்தாபி ராமர்பதந் துதிக்கும் — நாகய
தீரனருள் ராமய்யா சீலனருள் கதிக்கும் 1

நல்லறங்கள் செய்துபெற்ற பாலன் — ஜோதி
ராமசா மிச்சுகிர்த காமயசு சீலன் 2

காமரா சேந்த்ரசுப பேரன் — போடி
காமூலம் மாள்ராணி சுவினுற்ற பேரன் 3

மீனாட்சி தாட்பணியும் வீரன் — மருதூர்
மீனாட்சி ராணியருள் விகசிதகு மாரன் 4

தென்காசை யம்பதியாம் போடி — மன்னன்
திகழ்காம ராஜேந்திர மகிபன்மகிழ் மருகன் 5

பேரையூர் கொடுமுடி தம்பைய — துரைக்கு
பிரபல்ய மானமைத்து னசுக்ண மெய்யன் 6

இறசக்க நாய்க்கனூர் பாண்டியன் — கதிர்வேல்
லிறைவர்கு மினிதான மைத்துன சிலாக்கியன் 7

மானேசர் ரஹமத்துல் லாவே — தமது
மந்திரீ யெனப்புகழ் வைத்திலகு கோவே 8

காமனைப்பெற் றவனைப் பணிவான் — ராம
காமயவே ளாஞ்சுகிர்த நாமமணி குணவான் 9

சிங்கமெனு மாமருதூர் வாசன் — துரைச்
சீல கெம்பீர ஒய்யாரமகா ராசன் 10

மருவலரை வாட்டுரண சூரன் — தம்மை
வணங்குவரை யாதரிக்க வாஞ்சைமிகு தீரன் 11

காமயனூ ராஜுமகா வீரன் — இந்த
காசினியெல் லாம்புகழுங் கர்ணு வுதாரன் 12

ரதகசது ரகபடை யாளன் — சிங்கம்
நாவலர்க் கென்னுளும் நல்குகொடை யாளன் 13

மங்காத திடவீர முடையான் — மரு
மன்னர்திரை கொணர்ந்துபணி மணிவாச லுடையான் 14

வேதகோஷ்ட் டங்கள்சொலி யேத்தும் — வேத
வித்தகமெஞ் ஞானகுண விர்ப்பனர்கள் நத்தும் 15

மங்காத ஜெயபேரி டங்கா — சத்ய
வாசகர் புகழ்ந்தேத்தி யும்மன தடங்கா 16

விகடமிடு வோர்கள்குண காலன் — சதா
வேதாந்த நூலாக்ஷி விரும்புகுண சீலன் 17

காமனைக் காலாலு தைத்தான் — பாதங்
காலையொடு மாலைபணி கனகவிர தத்தான் 18

மாலைமற வாததிரு மார்பன் — வெற்றி
மாலைமற வாதணியும் மணியார மார்பன் 19

வாலிப மனோதிடகு பேரன் — வான
வாலிப வலாரிநிக ரானவுப காரன் 20

கற்பகக் காவைவெலுங் கையான் — வந்த
நற்புலவ ருள்ளமணு வேனுமுளங் கையான் 21

கார்மேக வண்ணதிரு ராமன் — யாதங்
காரணம தாகநனி போற்றுசெய்யும் பூமன் 22

பூமானும் பூமான்பு யத்தில் — வீரப்
புகழ்மாத கத்தினி லெப்போதுஞ் செயத்தில் 23

வயிரமுத்து மீனாக்ஷி யம்பாள் — ராணி
மால் ராமசாமி காமய்யதுரை யன்பால் 24

ஸ்ரீராமன் சீதையொ டயோத்தி — தன்னில்
சேர்ந்தரசு செய்ததிருக் காச்சி சையோத்தி 25

யாகவுல கோச்சிதிரு மாச்சி — மிக்க
யாட்சியம சாக்ஷிபுரி ஆனந்தக் காக்ஷி 26

மனுதர்ம மாமுறைபோல் வேளின் — தந்தை
மால்ராம னென்னபுவி யாண்டுவரு நாளில் 27

யானை வரவை அரசரிடம் வேடர்கள் கூறுதல்.

விருத்தம்.

சீர்பெறு, மருதூரெங்குஞ் சிறப்புறச் செங்கோலோச்சி
தார்பெறு ராமசாமிகாமவேள் தான்வாழ் நாளில்
கார்பெறு வலையில்த்தும்பி கலவரங்கண்டு நாடி
பேர்பெறு மரசன்பக்கல் பேசுவார் வேடரம்மா

வேறு சந்தம்.

ஆச்சாவுங் கோங்குவளர் நாடு — நல்ல
அழகான செண்பக மடர்ந்தமலை நாடு 1

சோங்கான வேய்வளரும் நாடு — சில
சிங்கார மந்தாரை சேர்ந்தமலை நாடு 2

பாங்கான பாதிரிசேர் நாடு — நல்ல
பலா மாவினங்கள் பருத்தமலை நாடு 3

வாடாத திணைவிளையும் நாடு — தூய
வனமோடை சோலை வளங்கும்மலை நாடு 4

வேடர்களும் வில்லியர்வாழ் நாடு — சிங்கம்
விளையாடி யானையுடன் றிரியுமலை நாடு 5

மாங்குயில்கள் பாடுகின்ற நாடு — தோகை
வரைமீது மயிலாடி வாழுமலை நாடு 6

வானளவு மோங்குவரை நாடு — நல்ல
வானரிசி மோனிகளும் வாழுமலை நாடு 7

மாராமல் மழைபொழியும் நாடு — தோப்பு
மலைசதுர கிரிகொம்பு மலையான நாடு 8

மாமலையில் வாழுகின்ற வேடர் — வாழும்
மாமலையி லானைபல வந்திடுவி சேடம் 9

கண்டுபல நாளாக வாடி — யானைக்
கலகமதா லுள்ளங் கலங்கிவழி தேடி 10

ஆயிரக் கணக்காகக் கூடி — மருதூர்
ஆளுமகா ராஜனிட மாவலுட னோடி 11

வந்தடிப ணிந்தழுது நின்று — மின்னே
வந்தவிப ரத்தை வழுத்துவா ரன்று 12

ராசாதி ராசபரமேசா — வெங்கள்
நல்லகுடி வாழவருள் செய்சுகுண போஜா 13

காத்தருளுங் காத்தருளு மென்றே — வேடர்
கவினுக நின்றுரைகள் செய்வதென் னென்றே 14

தேவர்குறை தீர்த்தரெகு ராமன் — போன்ற
திடவீர காமயவே ளாயகுண பூமன் 15

அஞ்சாதீ ரென்னகுறை யோது — மென்று
அரசர்குல பூபதியுங் கேட்டிடும் போது 16

சென்னிகரங் கூப்பிமகா ராஜா — ஒரு
செய்திகே ளெங்களது சீலபுவி நேசா 17

கொம்பானை தும்பிகரி மாவே — பல
குட்டிகளும் பட்டிபோல் வந்ததெங் கோவே 18

மாதங்க மானபல கூட்டம் — ஒரு
மாதங்க ளாகவந் தெங்களது தோட்டம் 19

செந்தினை போட்டபுனக் காடு — எல்லாம்
சீரழிவு செய்ததே என்னெங்கள் பாடு 20

சொல்லமுடி யாதபல கோரம் — ஐயோ
துன்பமே என்செய்த தோயிந்த நேரம் 21

வேடர்முறை கேட்டரண வீரன் — மருதூர்
நாடாளு மகராஜ ராஜாதி காரன் 22

ஓமென்று தீரமொழி கூறி — வேடர்க்
கூக்கமாய் வருதுமென வுறுதிசொலித் தேறி 23

வேட்டைக்கு அரசன் படையெழுச்சி

(வேறு)

வாரணிந்திலங்குபேரி வாத்தியகோஷ்டங்கள்வாரி
மானேலிநி கர்கிடவு மார்க்கவே — சேனை
வந்து வந்து கூடிநிரை சேர்க்கவே 1

வாம்பரிக ளாம்படைக ளோம்புவர்கள் தாம்பலரும்
சாம்பிருணி போடுமுன்னர் சாமியே — வந்த
சங்கதிபோல் வந்தமன்னன் பூமியே 2

ஞாளியும் வில்லாளியும் வாளாளியுங் கட்டாரிகத்தி
தோளிலகுங் கேடயங்கொள் வீரரே — பழஞ்
சூரர்படை வெல்பரன்போற் றீரரே 3

துந்துமிட மாரடங்கா தொந்தந்தொந்தம் வந்தமெனத்
துத்தியுந் துத்தாரிசின்ன மூதவே — வாத்யர்
சுத்திசுத்தி வட்டமிட்டுப் பாடவே 4

கந்துடி யிங்கிதகாள காகளஞ்சல் லாரிபம்பை
வந்திடியெ னப்பிரங்கு கூட்டமே — இட்டு
வந்தசுத்த வீரசூர ரீட்டமே 5

தப்புதவில் நாகசுர மொப்புவமை யற்றறைய
செப்புநிக ரற்றதடிக் காரரே — வனேச்
சித்திரப்பூ ணிட்டவெடிக் காரரே 6

வீரவெற்றி காட்டுகின்ற வீரசின்ன மோடுமன்னர்
காரணம தாங்கரிக்கொம் பூதவே — வேட்டை
கண்டுமகிழ் கொண்டுவகை பூதவே 7

கட்டியர் படைத்தலைவ ரொட்டியர்கு லத்திலகர்
மட்டிலா திலங்குபல பட்டியாள் — வீர
வல்லயந் தரித்தபலே கெட்டியாள் 8

வேவுகர் சேவுகர்மடச் சாலையர் வேலையர்பல
ஊழியர் சேனைகுலவே ளாளரே — படை
சென்றுவெட்டு கின்றபல தீரரே 9

தெலுங்கரும் கவரைகொங்க தீரருஞ் சிலம்படி
துலங்கிடு கலிங்க லிங்கக் கன்னடர் — வீர
வலங்கொளுந்தி ரம்படைத்த மன்னடர் 10

சேனையுந் திரள் திரளாய்ச் சேர்ந்திடக் காமயபூமக்
கோனுயர் குமரசிங்கம் போலவே — சர்வ
பூஷணம் பலபுனைந்தார் சாலவே 11

அங்கிதமான் வங்கிபங்கி யாயுதந் துபர்ந்த தோட்டா
வங்குபற்றி டாதபல ஞாளியே — ரைபிள்
தங்குசெங்கை வாளொடு வில்லாளியே 12

குச்சினுரு மாலுடனே கோக்கள்பூணும் டர்பன் டொப்பி
உச்சித டிரசுபல பூட்டியே — மன்னன்
ஓங்குசிங்க மானதிரங் காட்டியே 13

காரரக் கரைவதைக்க காரணமிகுத்தராம
பத்திர னெழுந்ததிர மானவே — ராம
காமயபூ மனெழுச்சி தோணவே 14

சுற்றிலும் நிறைந்தசுத்த வீராணி கண்டுமெச்சி
கற்றறி கணக்கர்முகம் நோக்கினன் — வேட்டைக்
காரணத்தை சுட்டிஓலை போக்கினன் 15

வீரமிகு காமயவேள் விள்ளுமுத்தா ரப்படிக்கே
பாரமிகு மோலைதனை வாரியே — விட்ட
தார்மனர்பேர் கூருமெனக் கோரியே

கிஞ்சுகனி கர்த்தமொழி வஞ்சியேகேள் ரஞ்சிதமாய்
செஞ்சொல்முறை தேர்சுகுணன் செப்புவான் — அந்
செய்திகளை கேட்டணங்கு மொப்புவான்

மகராஜ ராஜபோஜ வள்ளல்ராம காமராஜன்
முகினிறை வனத்திற்கரி வேட்டமே — செய்ய
முக்கியமாய் வைத்தபெரு நாட்டமே 18

வேடுவரும் வில்லியரும் விள்ளுபல சாதியரும்
வாடும்படி வந்துயர் மாதங்கமே — செய்த
மாவருத்தம் நீக்கராஜ சிங்கமே 19

சேனைபல கூட்டிவன வேட்டைசெய்ய வெண்ணியதால்
மானிலங் கொடிக்குளநற் றேப்பிலே — நீங்கள்
வந்துசேர வேண்டுமென்று தாக்கலே

நிருபம்

வேறு.

மாட்சிசேரேனு மலையாள் சுந்தராஜ
மாமா அவர்களுக்கும் — சேத்தூர்
தாத்தா துரையவர்க்கும் 1

தொட்டப்ப நாயக்க னூரைய்யா வாகிய
சுத்தன்க திரைய்ய வேல் — சுவாமி
தும்பிச்ச நாய்க்கனூ ராள் 2

கொடிமுடி தும்பைய மாமா அவர்கட்கும்
கோலமிகுஞ் சங்கையூர் — மாமா
கோமான் பொன்னுச்சாமி வேள் 3

அம்மைய நாய்க்கனூ ராளுஞ் சீமைச்சாமி
அம்மானவர் களுக்கும் — உத்தப்ப
நாய்க்கனூர்மா மாவுக்கும் 4

தாரிலகுங் காசைதாய் மாமாவாகிய
காமுரா சேந்திரர்க்கும் — முல்லையூர்
தாளுளுமன் னருக்கும் 5

மண்டல மெங்குபுகழ வளஞ்சேருங்
கண்டமனுய்க்க னூராள் — திருத்தம்பி
கதிரையசாமி கட்கும் 6

எரசக்க நாயக்க னூராளு மைத்துனர்
ஏந்தல் கதிர்வேலுக்கும் — மற்று
எல்லாமைத் துனர்தமக் கும் 7

ரோசனைப் பட்டிவாழ் வெள்ளைய பாண்டியர்
ஓங்குமா ராஜபுரம் — திருமலை
நாய்க் கரவர் தமக்கும் 8

செப்புங்கு மாபட்டி வீரகுமாரெனுஞ்
சீல மிருந்தேவற்கும் — போடி
மானேஜ ராயிலங்கும் 9

தீரன் ரகமத்துல்லா மாமாசீயமும்
சேனைகுல ஜோதிடர்—வெள்ளை
யாண்டி அவர்களுக்கும் 10

ஓலையில் வாசகம் ஓங்கப் படித்துக் கை
ஒப்பமிட் டேயனுப்பி — இராசன்
ஓதிடக் கேளதொப்பி 11

சுவாமி தெரிசனம் சகுனக் குறிகேட்டல்
(நொண்டிச் சிந்து)

செந்திருக்கந் தன்னை யனுப்பி — காமயவேள்
சேனைபடை வீரர்களை முன்னேயனுப்பி

வேட்டைக்குச் செல்குவ மென்றே — நம்மகுல
வோங்குதெய்வ உத்தரவைக் கேட்பமென்றே

உத்தார மானவுடனே — விசிறி ஆல
வட்டமொடு ஓங்கத்திரி வீசிவரவே

நட்டுமுட்டு நாகசுரமே — வட்டவுல
கொட்டுதிரை மட்டுலவ பட்டர்முதலாம்

மங்கள மொழிகள் பகர — பூசாரி
நாய்க்கருடன் கோவில்வந்து வேட்டைபோய்வர

உத்தரவு வேணுமெனவே — காமயவேள்
உச்சிதமுடன்றெளுக உத்தமத் தெய்வம்

கோடாங்கி கொட்டியழைக்க — குலவையிட்டு
குதித்துக்கொண் டாடிபாடி குறியுரைக்க

வல்லக்கொண் டம்மை யறிய — நாகய
தாத்தா தலைவெட்டிச்சுவாமி யரிய

பார்வதி பரமசிவன் — யேளுமலை
பாம்பிலே படுத்திருக்கும் பரமறிய

சதுரகிரி லிங்கமறிய — சாமிநீர்
தந்திவேட்டை யாடநானுந் துணைவருவேன்

சக்கம்மாத் தாயறிய — நம்மகுல
சாமிக ளரியவென்று சாற்றிடவே

பூசாரி சொல்லுமிருக்கு — நமக்குறுதி
புகழ்பல்லி சொல்லவென்று ராசன் வின்வ

இடத்தில்த் திடத்திலுரைக்க — வதி
லேகிடக் கருங்குருவி செங்கருடனும்

காகம் வழிதரவே —காமயவேள்
காட்டானை வேட்டைசெய உருதிகொண்டு

அரசன் பிரயாணம் கோடிக்குளம்.

(கட்டபொம்மன் பாட்டு)

பட்டத்து மாவினி லேரிக் கொண்டார் துரை
பக்கத்தில் சேனைகள் சூழநின்றார்

கட்டியம்மந்திரி மாருகளே நம்மள்
பட்டணங் காவல் பதனமென்றார்

ஆராரு வந்திட்டபோதிலும் மந்திரி
அஞ்சிப் பயப்பட வேண்டாமென்றார்

ஆஸ்தான மண்டபங் கச்சேரி சாவடி
அத்தனையுமுசா ரென்று சொல்லி

ஆயிரம்பொன் பெற்ற பட்டாவெனும்புக
ழாயுதம் வாங்கிக் கரம்பிடித்தார்

கத்தியுங்கேடயந் தாணணிந்தார் பாதர்
சுத்திப் படைகளுஞ் சூழவந்தார்

வெள்ளைவெள்ளைறென்ற வெள்ளியின் கூட்டத்தில்
வெள்ளிய சந்திரன்போலே நின்றார்

கன்னங்கரேனென்ற ராச்சதக் கும்மலில்
காகுத்தன் போலக் கதித்திருந்தார்

தோட்டாவெடுத்துக் கரம்பிடித்தார் — துரை
காட்டானைவேட்டை கருத்து வைத்தார்

வெற்றிமுரசு விருதுகதித்திட
வேல்கள் பளீரென வேகநடந்தார்

இந்தியாவெள்ளைத் துரைபோலே பரி
யேரிக்கொடிக்குளம் போயமர்ந்தார்

மன்னவனிப்படித் தாமிருக்கப் பல
மன்னர்கள் வந்ததைக் கேளுமினி

அரசர்கள் கோடிக்குளம் வருதல்.

வேறு கும்மி

மன்னனெழுமலை வாழுஞ் சுந்தராஜ
மாமாபடையுடன் வந்துவிட்டார்

சோத்தபநாய்க்கனூ ராமராம பூபதி
சுத்தவீரமாமா வந்துவிட்டார்

தொட்டப்பநாய்க்கனூ ராளுமய்யாவெனும்
துய்யகதிரைய்ய சுவாமிவந்தார்

தும்பிச்ச ஞய்க்கனூர் மாதுலமைத்துன
சூரன்கொடு முடித்துய்யன் வந்தார்

கோலமிகுஞ் சந்தை யூராளும் பூபதி
கோமான் பொன்னுச்சாமி மாமன் வந்தார்

கூளுச்சாமிராம லிங்ககசாமி தாத்தன்
கூட்டப்படையுடன் சூழ்ந்துவந்தார்

நாடுமதிக்கின்ற கட்டாரிப் பாண்டியர்
ராமசாமிப் பாண்டியர் வந்துவிட்டார்

பொன்னுச்சாமி சின்னச் சாமி அழகிரு
சாமி முத்துவீரு சாமி வந்தார்

முல்லைநக ராளும் வள்ளல் சொக்கலிங்க
தாத்தாவும் மூர்க்கமாய் வந்துவிட்டார்

மாமகாராஜ புரத்தில் வளர்கின்ற
மன்னன் திருமலை நாய்க்கர்வந்தார்

மானேசர்மந்திரி யான போடிவளர்
மன்னன்ரகம துல்லாவும் வந்தார்

வள்ளலெனுங் கவி சொல்லிய ஜோதிட
வெள்ளை யாண்டியெனும் வீரன் வந்தார்

தாய்மாமாவாகிய தென்காசை காமுரா
சேந்திரன் வாரதை பாருங்கடி

காசைமன்னன் புரப்பிடுதல்.

வேறு

மருமகனு ரெழுதுதிரு முகமே — தமக்கு
வந்திடக் கண்டுதிகழ் காசைமன் னகமே 1

திருமுகம் வந்ததுகை சேர்த்து — தமது
திருமருக னெழுதியதை சீர்த்தியுறப் பார்த்து 2

கர்ணுவ தாரனெனுஞ் சீலன் — விஸ்வ
கந்தசாமித் துரைநல் வீன்றருளு பாலன் 3

காசைநக ராஜுமகா ராஜன் — டி. வி. கே.
காமரா ஜேந்திரனெனும் ராஜகுல போஜன் 4

மாதங்க வேட்டமெனக் கண்டார் — தனது
மனதிலுயர் வாமுவகை வாரியெனக் கொண்டார் 5

மந்திரியை நோக்கவெதிர் நின்றான் — நாமும்
வனவேட்டை தானேகி வருமளவும் நன்றாய் 6

தனதுவசூல் தர்பார டுத்து — வெகு
சாக்கிரதை யாய்ப்பார்க்க தாக்கிதுகொ டுத்து 7

பெரியாண்ட வன்சக்கா தேவி — வேட்டை
பிசகாது செய்துவரப் போற்றிமலர் தூவி 8

காசிவிஸ்வ நாதரடி போற்றி — கோட்டை
கருப்பண சுவாமிபதங் கைதொழுதங் கேற்றி 9

வேட்டைத் தலைவர்கெடி வீரர் — காசை
மேவுபல பட்டிவளர் கின்றவெடிக் காரர் 10

தற்சூழ பொற்காசை யள்ளி — தான
தர்மங்கள் முறையாகத் தந்தருளும் புள்ளி 11

மயிலேறு குகநாதன் போல — காமு
ராஜயவே ளார்ந்தபல ராணுவமே சூழ 12

பொன்னாட்டுக் காமயனைப் போல — தீர
முன்னாட்டுக் காமய னிலங்கிடவுஞ் சால 13

குலசேக ரப்பாண்டிய தீரன் — வாசி
கொண்டுவரச் சொல்லியதி லேறினா னாதாரன் 14

சுந்தரப் பாண்டிய சுவாமி — தம்பி
சுடுவதென விவுளியிசை யேறிசிவ நேமி 15

வேட்டைவெடி கத்திசமு தாடு — ஞாளி
மிருகவீரர் கைக்கொண்டு வேணபுக ழோடு 16

வருகுமின் னேகுமின் னென்றே — டால்விரு
திலங்கவே ழத்தினது வேட்டமது வென்றே 17

நாடுமலை கடலதிர மன்னர் — பேரி
போடுபோ டென்றறைய புரப்பட்ட பின்னர் 18

மாநிலத் தோங்குபுகழ் வீரன் — கட்டும்
தேனிகை ரத்திலுயர் சத்திரமுந் தாண்டி 19

தும்பிருச நாய்க்கனூர் தாண்டி — மேலே
தொட்டப்ப நாய்க்கனூர் கணவாயுந் தாண்டி 20

உசிலம்பட்டி பிற்காவைத் தாண்டி — அல்லிகுண்
ரேணி கடந்துசேட பட்டியுமே தாண்டி 21

காமயநா யக்கனூர் கண்டு — தலைவெட்டி
கட்டாரி நாகயனைக் கைதொழுது கொண்டு 22

வந்தப டைக்கெல்லாம் விருந்து — உத்தரவு
மாராத விந்துகல மாயவரி ருந்து 23

ஆவணக்காப்

சந்தோசன் கொண்டெழுந்து சேனை — காலை
தகதகெனுஞ் சூரியனை கைதொழுது தானே 24

அழகாபுரிநகரந் தாண்டி — மூப்பனூ
ரணிதாண்டிக் கணவாயை ஆவலொடு தாண்டி 25

தம்பிபட்டி பங்களா கண்டு — எல்லாத்
தண்டுபானை யடிரங்கித் தகையாரிக் கொண்டு 26

சடைதாரி யம்மனது சீர்த்தி — பார்த்து
தாணிப்பா றைகடந் தேகியகல் நேத்தி 27

மகராஜ புரம்மாத்தூர் தாண்டி — மேற்கே
வத்துரா விருப்பென்னும் மானகரந் தாண்டி 28

பாளையங் குமாபட்டி நின்று — காப்பி
பருகியவ ரார்ப்பரித் தேகிவெளி சென்று 29

சோதிவெயி லோன்மறைய வன்று — மேலே
தூளிதம்ப ரந்தவகை சொலமுடியா தென்று 30

படியேழுங் கிடுகிடெனத் தளமே — படி
பாங்காக வந்திட்டார் பகருகொடிக் குளமே 31

மகராஜா கொம்புமத யானை — சமுகம்
வரும்படியான் கொண்டுவினும் வாங்கிடுவன் யானே 32

பட்டத்து யானைசிரு கன்று — தன்னை
பாங்காய் பிடித்துவர யான்செய்வ னென்றும் 33

கலைமான் கரடிபுலி பன்றி — தம்மை
கால்வாரி கன்றுகளை வென்றிடுவ னென்றும் 34

இன்னும் வில்வீரரெரோடு சூரர் — கூறி
இனும்பெர வென்றே தொழுதார்எளில் தைரியகாரர் 35

கன்னனெனுங் காமயவேள் கண்டு — ஓசை
கலகலெனப் புன்சிரிப் பானந்தங் கொண்டு 36

சொன்னபடி செய்தவர்கள் கையில் — வயிரத்
தோடா கணையாழி சொர்ணமது யீய்வோம் 37

அன்னமது உண்ணுமெனச் சேனை — பூரா
அந்தனையுந் திர்த்தியென உத்தரவு தானே 38

எல்லோ ரிருங்களெனச் சொல்லி — வேட்டை
இஷ்டகுல பெந்துக்கள் யாவரொடுஞ் செல்ல 39

நீராடுஞ் சாலையில்போய் ஸ்நானம்—செய்து
நித்திய அனுஷ்டானவிதி ஸேமுக நிதானம் 40

வந்தனைசெய் காலைகடன் தீர்ந்து — வந்த
வரசரொடு போசன முண்பதெனத் தேர்ந்து 41

இராசன் வரவேற்பு

வேறு

வந்தவந்த மன்னர்களுக் கேய்ந்தமரி யாதைசெய்து
வள்ளலெனுங் காமயவேள் வாழவே — படை
மன்னர்சேனை வந்துவந்து சூழவே 1

அன்னமுங் கறிவகையு முன்னிதமிகு மமிர்த
மென்னவும் புசித்திளப்ப தாரினர் — வேட்டைக்
கின்னிமிட மேற்றதெனக் கூறினர் 2

சங்கிலியும் வெண்டையமும் தங்கமணி ஆபரணந்
தங்கிடப் புனைந்தபல ஞாளிகள் — தன்னை
சங்கிலியினர் பிணித்த மீளிகள் 3

குந்திலிய டித்திடக்கை கொண்டவனை உற்றதடி
கோடிகோடி யாய்ப்பிடித்த சூரர்கள் — யானை
குத்துவேற் பிடித்தசத்த வீரர்கள் 4

கத்திகள்கட் டாரியீட்டி கம்புகோணக் கம்புமுதல்
பத்திபத்தி யாய்ப்பிடித்த பாண்டியர் ... பூண்கள்
சுத்திய வில்லைப்பிடித்த காண்டிபர் 5

பாங்குபாலா சூல்சுருட்டு பாய்ந்துகுத்து கின்றபட்டா
ஆங்குபுனை யாயுதத்தண் டாயுதர் — பல
வாயுதம புனைந்திடுகுண் டோதரர் 6

பக்கறைகொ டிசுருட்டி பத்திபத்தி யாய்பிடித்த
சொற்கறைகண் டாருரைப்பர் நாடியே — இன்னம்
தோன்றல்புரி கீதமுங்கேள் லேடியே 7

எளுமலையை யாளுகிற வீரன் — வேலு
யெழுமழுவும் பலவணியு மேந்திகான் றீரன் 1

தொட்டப்ப நாய்க்கதுரை மன்னர் — யேழு
தோட்டாப் பதித்ததுறையிள் தோளமைத்த பின்னர் 2

சோத்தய நாய்க்கனார் சூரர் — சோடி
துணைகொண்ட பட்டாள துப்பாக்கி கொண்டார் 3

சந்தையூ ராளுமகா ராஜன் — தந்தி
தத்திவிழத் தைக்கின்ற தோட்டா வெடுத்தார் 4

காசைநக ராளுமகா ராஜன் — கர்னல்
கையிலகு ரைபிலதைக் கையிலே பிடித்தார் 5

கெடிவீர குலசேகர பாண்டியன் — செனரல்
கிடுகிடென வலருகிற கெட்டிவெடி கொண்டார் 6

துடியான சங்கராஜ பாண்டியர் — சீலன்
துரிதமாய் துப்பிபடு சொகுசுவெடி கொண்டார் 7

கட்டாரி பாண்டியரெனுங் தீரன் — தங்கக்
கட்டிட்ட வெடிகள்பல கைக்கொள்ள லானார் 8

ராமசாமி யெனுநாம முடையோன் — சீமை
ரைபிலதனோடு அருவாளுமேகை கொண்டார் 9

பொன்னுச் சாமிசின்னச் சாமி — இருவரும்
புகழ்பெரிய துப்பாக்கி கைகொண்டு நின்றார் 10

அழகிரு சாமியெனும் பெயரோன் — இருநா
றடிபாயும் ரைபிலதை கையிலே பிடித்தார் 11

முத்து வீருச்சாமி யென்போர் — யானை
முன்னுருளக் கன்னொன்று முனுபலமாய்க் கொண்டார் 12

தம்பிச்ச னய்க்கனூர் துரையே — தம்பி
துள்ளிவிழத் தைக்கின்ற துப்பாக்கி கொண்டார் 13

மகராஜ புரியாளும் நாய்க்கர் — யானை
மதங்கக்கப் பாய்கின்ற பாரவெடி கொண்டார் 14

கும்மாபுரி வீரகுமாருத் தேவர் — சற்று
குறியணுவும் பிசகாத குண்டுவெடி கொண்டார் 15

கார்மேகம் போன்றிலகு ராம — சாமி
காமயவேள் பூண்டபடை கண்டுரைக்க லாமோ 16

வாலவயதான விளஞ் சிங்கம் — யானை
வாய்வழியே பாயுகிற வல்லயமும் பூண்டார் 17

கோலக் குமரநிகர் கோலன் — வைத்த
குறியணுவுந் தப்பாத குண்டுவெடி கொண்டார் 18

தாண்டாத வாய்மைநெறி தீரன் — தோளில்
தங்கமய மானபல தோட்டாக்கள் பூண்டார் 19

வேட்டை புரிதல்.

விருத்தம்

செஞ்சாலி கதலிபலா திரல்கமுகு சோகுபுன்னை சேஞ டோங்கி
மஞ்சாருஞ் சதுரகிரி மகாலிங்கத் திருவருளை மனதுட் பூண்டு
அஞ்சாத நலனருள்செய் வல்லக்கொண் டம்மைபதாக
தொழுதுபடை அனைத்துஞ் சூழ
கஞ்சநெதிர் முன்னெழுந்த கண்ணனபோல காமயவேள் வேட்டை
புரி கதை சொல்வாமே.

வேறு

மோகன சிங்கார மடமானே — வேட்டை
முஸ்தீபு நான்சொல்லுவேன் கேளடி செந்தேனே 1

நடனமிடு பரியதனி லேறி — ராம
சாமி காமயசுகுணன் சர்ச்சனைப்போல் தேரி 2

டாசண்டன் விவுஞ்சிகர்னன் போல — டிாசு
தான்பூண்டு தடதடென பரையறையச் சால 3

கருஞ்சட்டைக் காரர்பல ரோட — சூரர்
கருநாயைச் சங்கிலியிற் பூட்டியுமுன் னோட 4

பளபளெனப் பட்டாக்கள் மின்ன — வேல்கள்
பகலவனை நிகரலவென் றேதிரொலி துன்ன 5

ராவணன் மீதுராம ணனல் — விட்ட
ராமபாணம் போல யீட்டிபல துன்ன 6

கண்டகண்ட செடிகள் தனை வெட்டி — காலாள்
கடல்போல திமுதிமென கட்களையு ருட்டி 7

கதிகொண்ட காலாள் நடக்க — ஈட்டி
கட்டாரி வேல்குந்தக் கையாள் துடிக்க 8

கோடானு கோடிபண்டையாட்கள் — கூச்சல்
கொண்டவிடி போற்குமிர கூர்கொண்ட வாட்கள் 9

பாலாவும் பட்டாவு மேந்தி — பாதர்
பானுவொளி நாணிவிட பற்பலகற் காந்தி 10

வாரிதிபோ லோங்கி வழிதாண்டி — சேனை
வனவண்ணப் பாரைக்கற் கட்டுபுளி தாண்டி 11

தூங்கலத் தய்யனடி போற்றி — பல்லிபிடஞ்
சொலவெற்றி யாகுமென வெல்லோருஞ் சாற்றி 12

கயிலாசம் பிள்ளைமடந் தாண்டிச் — சிறைக்
காடேறி வீசர்களைக் கதியாகத் தாண்டி 13

தோப்புமலை மூப்பன் வனம் பேச்சி — மாட்டுத்
தொளுவளரும் பெருமாளுச் சாமிபுளி மாகூடி 14

மாமரம் படுகைமாங் கேணி — ஆத்தியடி
மாட்டுத் தொளுமுதல் கோட்டைமலைத் தோணி 15

கட்டளைக் கோம்பைகன்னி யம்மா — பாதங்
கைதொழுது வேட்டைபுரி கதைசொல்வே னம்மா 16

ராஜன், வேட்டஞ் செய்ய ராணுவத்தை நாலுபக்கமும் நிறுத்திக் காடு கலைத்தல்.

சதுர்வித முபாயமறி மன்னே — செய்த
தந்திரங் கேளடியென் சையோக மின்னே

நாகைய சுவாமிகல் முந்தல் — தன்னில்
நாகமக லாதபடி ராணுவத்தை யேந்தல்

கட்டாக யாள்நிருத்திக் காத்தார் — மிக்க
தட்டப்பா ரைதனிலுஞ் சேனைகளைச் சேத்தார்

நாய்க்காரர் சேனைகளைப் பார்த்து — பெரும்
பேய்னெறுங் குட்டத்தில் பிறழாமல் சேர்த்து

கொய்புகளத் தாலமரத் தூத்தில் — கருந்
தும்பி விலகாதபடி சூரர்படை சேத்தி

மாதங்கக் கோட்டமதை யாமே — பல
மாதங்க ளானலும் விலக்கிடுவ தாமே

வாழமனங் கொண்டவன வேடர் — சொன்ன
வேழமதை வெல்லுவதி னாலே விசேடம்

என்றுறுதி கொண்டரச சிங்கம் — நின்ற
குன்றாத வீரன்தனைப் பார்த்தாண்டி தங்கம்

(வின விடை)

தங்கமேகே ளென்றுரைத்த நாதா — மன்னர்
சதியாக யானைகளை வெல்லுவது தோதா

சீவவதை யென்றபெரும் பாவம் — வந்து
சேராதோ யீதென்ன சிமான்சு பாவம்

தன்னுயிர்போல் மன்னுயிரைக் காக்கு — தன்மை
தான்கொண்ட வீரனெனச் சாற்றினியே நேக்கு

என்றுமட மாதவளுங் கேட்க — மாதே
இராசர்க்குத் துஷ்டரை வெட்டிநல மாக்க

சட்டமுண் டாதிமுறை யென்றே — சாற்றி
தையலே கேளரசன் வேட்டமதை நன்றே

தடிகொண்ட கெடிவீர சூரர் — பாதர்
தடதடென படபடென தான்சென்றா [illegible]

விகடமிடு வோர்கள் குலகாலன் — பின்னே
வெடிகுண்டு தோட்டாக்கள் பலகொண்டு காலாள்

கடல்மீதி லெழுருமிழி போல — வேணக்
காலாட்கள் கலகலெனக் கூலத்தமிளி சால

அண்டாண்ட மெண்டிசையு மாட — வேணக்
குண்டோதரர் குலவை கூச்சலிட் டாட

அல்லோல கல்லோல மாக — வீர
வில்லாளி வாளாளி வேட்டமொரு பாகம்

கட்டுமுட்டு தப்புதவில் கொட்டி — வீரர்
நாலுதிசை யோசையுற நல்லகிடி முட்டி

வங்கார மணிமுத்துத் தங்கம் — பக்கல்
டங்காட மாரவொலி மாருதி லங்க

நந்தாத முகிலேறு நாதன் — நாடர்
தெந்தோந் தோந்தீமென்று துந்துபியி ஞரம்

வந்தோத சிந்தோதை போல — கான
முந்தோது தந்தோது கின்றவொலி சால

ஒய்யாரக் காமயவேள் சேனைக் — கூச்சல்
செய்தோங்கப் புள்ளீட்டம் சேரமரு கானே

சரசரென திடுதிடென கேட்டு — மான்கள்
யரபரென் திருதிரென முழித்துக்குதி போட்டு

திரளசர் கிறையரவத் தீரலே — நாகத்
திரளலறி விருவிரென சென்றபுலி யாலே

பகைவெருவ புரியமர்வேழ் சேனை — சத்தங்
குகையிலெழுவி கரியலறி போந்தபல தானை

பட்டாக்கள் வேட்டமொரு பக்கம் — பிண்டி
பாலாபி டித்தவரி வேட்டமொரு பக்கம்

வேல்க்காரர் வேட்டமொரு பக்கம் — வீர
வில்காரர் செய்கின்ற வேட்டமொரு பக்கம்

வாள்க்காரர் வேட்டமொரு பக்கம் — மான்கனை
வாங்காலே குத்துவரின் வேட்டமொரு பக்கம்

தடிக்காரர் வேட்டமொரு பக்கம் — குண்டு
வெடிக்காரர் சுடுகின்ற வேட்டமொரு பக்கம்

நாய்க்காரர் வேட்டமொரு பக்கம் — முசல்
நாடியடிக் கின்றதொரு வேட்டமொரு பக்கம்

காலாட்கள் வேட்டமொரு பக்கம் — காலின்
கதிகொண்ட வீரர்செய்யும் வேட்டமொரு பக்கம்

வீரென் றலறிவரும் ஆனை — விண்ணை
விசிறிப்பி டிக்கக்கை வீசிவரு மானே

மாவை முறித்துவரும் மாவே — மூன்று
மதத்தால் வனத்தை நனைத்துவரு மாவே

காரென் றெழுந்துவருங் கரியே — தீப்போற்
கண்ணைத் திறட்டி முளித்துவருங் கரியே

வெடிவா லுயர்த்திவரு வேழம் — காதை
முறம்போல் சைத்துவெ குண்டுவரும் வேழம்

தந்தங் குலுக்கிடுமா தங்கம் — மேனிச்
சதைகள் குலுக்கிவருஞ் சப்தமா தங்கம்

சிந்துகனல் பெய்திடு சிந்தூரமே — கண்டோர்
 சிந்தைகள் கலங்கவருகின்றன சிந்தூரமே

காடிபுலி மாடுகலை மான்கள் — மொத்தக்
 கதித்தாடி யோடிக் குதித்தனவக் கான்கள்

வெடிக்கட் டுள்புறமாக வைத்து — மன்னன்
 வெகுவாக வொருவாரம்வ ரைக்கும்முகாம் வைத்து

கன்னிமார் நாகைய மாலும் — மாக்கள்
 கருப்பண்ண சாமியரு ளால்வந்த தாலும்

வந்தெதிரில் சூழ்ந்தபல கரிமேல் — நர
 சிங்கமொரு ராக்கதன்மேல் பாய்ந்திட்ட விதம்போல்

தென்காசை யரசுபுரி சிங்கம்—தோட்டா
 திரமாய் பிடித்தடிக்க யானைபல பங்கம்

வங்கார மணிமுத்துத் தங்கம் — சுட்ட
 வகைகண்டு சக்கையூர் வாழ்ராஜ துங்கம்

மாலாம் பொன்னுச்சாமி மன்னன் — ரைபி
 லாலே சுடவொரு கொம்பானை பின்னம்

மாமன்மா ரிருவர்களும் வேட்டஞ் — செய்ய
 மனமகிழ்சி பூண்டிலகு மருகனுக்க நாட்டம்

வந்தஇரு துந்துபிகீழ் வீழ — கைபில்
 வலுவாய் பிடித்தடித் திட்டானே நீள

மாதங்கம் விழவாட்டி மன்னன் — ஒரு
 மாதங்கக் குருளை தனைச் சுற்றிமகிழ் துன்ன

இரணியனை வென்ற நரசிங்கன் — பிரக
 லாதனையன் றுண்டகதை போலாக தங்கம்

யானைக்கன் றென்றைக் கைப்பற்ற — ராஜன்
ஆண்மைகண் டெல்லோரு மாவலாய் சுற்ற

மாமருதூ ராளுமுடி மன்னன் — ரெண்டு
மதயானை சுட்டுவிளங் குட்டிகவர் கர்னன்

இத்தரணி ராசர்க ளெல்லோரும் — எப்போதும்
இப்போது செய்தபெரு வேட்டையது சிரும்

கண்டவருங் கேட்டவரு மேது — என்று
காசினியோர் துதிசூர கமலமலர் மாது

இருபுயத் தகலாத சூரன் — வாணி
எப்போது மும்விஜய மிசை னூற்கெம் பீரன்

நெரிதவரா வருடமுத்ரக் காரி — மாசும்
நிகழ்கன்னி வெள்ளியிரு பத்தியார் பாரில்

பட்டத்திற் கேற்றமா தங்கம் — தன்னை
பசுந்துளப மாலவனின் கிருபையரும் தங்க

சதுரகிரி யாண்வல்லக் கொண்டு — கருணை
தலைவெட்டி நாகய தாத்தனருள் கொண்டும்

கோசம்வால் கைப்பூமி தோய — முன்னுயர்வு
கொண்டரச யானையெனப் பண்டிதர்க ளாய

சாண்டோ வெனப்பெயரே பூண்டு — ராசன்
தன்கையினல் வேளமது தன்னையு கொண்டு

வீமன்காண் டிபமெென நாமம் — பெற்று
மிகுவீரர் தங்களொடு பவனிவரு சேமம்

மாமருதூ ராளுதுரை போஜன் — திருவும்
மார்பகலா ரணசூரன் மன்னவர்கள் நேசன்

இராசவரி மீதிலவ ரேறி — திரு
நடனமிடு பூபாலன் நற்பரியி லூரி

கொடிக்குளங் கும்மாபட்டி நகரம் — ஒரு
கோடிநரு ளாலாத்தி குரவையுடன் வரவும்

ஜெயபேரி வாத்திய முழங்க — அஷ்ட
திசைபூமி அந்தர துந்துமி முழங்க

எதிர்கொண் டழைத்துவரப் பலருந் — தெய்
வேந்திர போகமென ஊர்கோலம் நல்ல

கொடிக்குளம் பங்களா தன்னை — திருக்
கொலுமண் டபஞ்செக ஜோதியென மின்ன

மணக்கோல மாமனை தா னென்ன — செய்து
வந்திரங்கி திஷ்டிபரி காரமது பண்ண

கவிவாணர் துதிகூற நாளும் — அவர்கள்
கலிதீரப் பொருளீயுங் கர்னனென வாளும்

சாப்பிட்டு ரென்னுமரு துரை — அரசு
தான்புரியுங் காமயவேள் தர்மமது நேரே

வேட்டைத் தலசிகளை யாய்ந்தும் — சூரர்
மிகுவீரர் தங்களுக்கு வேணபொரு ளீய்ந்தும்

மற்றதுரை மார்களெல் லோரை — இராச
வருசைதவ ராதவர்கள் மானகர்செல் வோரை

உத்தரவு செய்தனதூர் நாடி — சேனைசூழ்ந்
தூர்கோல வந்தமது யர்ந்தமனை கூடி

ஆலாத்திக் காரர்மறை யோர்க்கும் — செம்பொன்
அள்ளிக்கொ டுத்தவர்க ளாசிமுத லேற்கும்

சீதைமணஞ் செய்தயோத்தி ஆழ்க — இராமர்
சேர்ந்தநலம் போல்பட்டத் தேவியரும் வாழ்க

காமயனூ ராஜாமகா ராஜன் — காசினி
கண்டிருந்தார் சங்கநிதி பதுமநிதி போஜன்

அருள்தருகும் ராமனடி போற்றுங் — திருவும்
அகலாத ஆண்மகவு ஆசையொடு வேற்றும்

பூலோக தெய்வேந்த்ர னென்ன — கீர்த்தி
புவிமுழுதுங் கர்னனெனப் புகழ்மிகுதி துன்ன

வாழ்ந்திருந்தார் மாமறைநூல் வாழி — கேட்ட
மன்னவரும் மரபினரும் வாசியபோற் வாழி

ஆங்கிலியர் மன்னவரும் வாழி — இதை
ஆதரித்த வெல்லோருஞ் சொன்னவரும் வாழி

தனனதன தனதந்த னானே — தன்ன
தனனதன தனனதன தனதந்த னானே

சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றுப்பெற்றது.

—)*(—